சனிக்கிழமை

# யேகோவா நம் தேவன்

சங்கீதக்காரன் கூறுகிறதாவது : "கர்த்தர் எல்லோர் மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது." (சங். 145:9)

இந்த வாக்கியம் சகலத்தையும் உள்ளடக்கிய அண்ட சராசரத்தின் உச்ச எல்லைகளையும், அதே சமயம் சிறிய மற்றும் மிகப் பெரிய ஜீவராசிகளையும் தன்னுள் அடக்கியுள்ளது. அனைத்து சிருஷ்டிகளும் அவருடைய மேற்பார்வையில் இருக்கிறது. நம் தேவனாகிய யேகோவா, அகில உலகிற்கும், ராஜாதி ராஜாவாக இருக்கிறார். அந்த உயர்ந்த ஸ்தானத்திற்கே உரிய பொறுப்புகளுக்கு அவருடைய ஞானம், வல்லமை, நற்குணம் மற்றும் பரந்த உள்ளமானது அபரிமிதமாக நிறைந்து காணப்படுகிறது. அப்படிப்பட்ட பொறுப்பிற்கு ஏற்றவராக இருப்பவரின் மன ஆற்றலை புரிந்து கொள்ள எடுக்கப்பட்ட முயற்சியில் மனித மூளை நிலை தடுமாறுகிறது. ஒருபோதும் தோல்வியடையாத ஞாபகத்திறன்; ஒருபோதும் தவறாத நியாயத்தீர்ப்பு; ஒருபோதும் தோல்விக்கு இடமில்லாமல் நித்தியத்துக்கும் திட்டமிடுகிற அதேசமயம் யுகா யுகத்திற்கும் அத்திட்டத்தை பிழையின்றி துல்லியமாக நிர்ணயிக்கும் ஞானம்; உயிரற்ற மற்றும் உயிருள்ளவைகளாகிய எதிர்க்கிற யாவற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்தி அவைகளை தம்முடைய பிரம்மாண்டமான திட்டம் நிறைவேற இசைவாய் நடத்தும் வல்லமை மற்றும் திறன்; அண்ட சராசரத்தை காக்கிறதில் வருகிற அழுத்தத்தில் சோர்வுற்றிராத நித்திய கண்காணிப்பு; ஒரு போதும் உறங்காத கண்கள், எப்போதும் திறந்திருக்கிற காதுகள், எல்லா தேவைகளையும் அறிந்திருக்கிறவரும் தம்முடைய பரந்து விரிந்த ஆளுகையில் உள்ள அனைத்து காரியங்களிலும் நிறைந்திருப்பவரை ஒரு கனம் எண்ணிப்பாருங்கள்.

R 1560:2